பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை-4
11 02 2025 7 15
செவ்வாய்க்கிழமை காலை

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. பிரதமர் திரு. நரேந்திர மோடி இன்று பிரான்ஸ் அதிபர் திரு. இம்மானுவேல் மேக்ரோனை சந்தித்து இருதரப்பு உறவுகள் குறித்து பேச்சுவார்த்தை நடத்துகிறார்.

2. இந்திய எரிசக்தி வாரத்தை ஒட்டி நடைபெறும் நான்கு நாள் மாநாட்டை காணொலி காட்சி வாயிலாக பிரதமர் இன்று தொடங்கி வைக்கிறார்.

3. போதைப் பொருளுக்கு எதிரான தொடர் நடவடிக்கைகள் காரணமாக கடந்த ஆண்டில் 25 ஆயிரம் கோடி ரூபாய் மதிப்பிலான போதைப் பொருட்கள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளதாக மத்திய அரசு தெரிவித்துள்ளது.

4. நாகையில் இருந்து இலங்கையின் காங்கேசன்துறைக்கு இயக்கப்படும் கப்பல் சேவை மீண்டும் நாளைமுதல் தொடங்குகிறது.

5. அமெரிக்காவில் நடைபெற்று வரும் சர்வதேச டென்னிஸ் போட்டியின் ஆடவர் இரட்டையர் பிரிவு முதல் சுற்று ஆட்டத்தில் இந்தியாவின் ஸ்ரீராம் பாலாஜி – மெக்சிகோவின் ரேயாஸ் வரேலா இணை இன்று அமெரிக்க இணையை எதிர்கொள்கிறது.

<u>*--- இனி விரிவான செய்திகள் ---*</u>

<<<<>>>>

பிரதமர் திரு. நரேந்திர மோடி இன்று பாரீசில் பிரான்ஸ் அதிபர் திரு. இம்மானுவேல் மேக்ரோனை சந்தித்து இருதரப்பு உறவுகள் குறித்து பேச்சுவார்த்தை நடத்துகிறார்.

இந்தப் பேச்சுவார்த்தையின்போது இரு நாடுகளுக்கு இடையிலான முக்கிய ஒப்பந்தங்கள் கையெழுத்திடப்படுகின்றன.

பாரீசில் இன்று நடைபெறும் செயற்கை நுண்ணறிவு உச்சிமாநாட்டிலும் பிரதமர் கலந்துகொள்கிறார்.

செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பத்தை பொறுப்புணர்வுடன் பயன்படுத்துவது குறித்து இந்த உச்சிமாநாட்டில் விவாதிக்கப்படுகிறது.

ஃபிரான்சின் தெற்குப் பகுதியில் உள்ள **Marseille** நகரில் இந்திய தூதரகத்தை பிரதமர் திறந்து வைக்கிறார்.

இந்திய – மத்திய கிழக்கு – ஐரோப்பிய நாடுகளுக்கான பொருளாதார வழித்தடத்திற்கு மிகுந்த முக்கியத்துவம் அளிக்கக்கூடியதாக இந்த தூதரக அலுவலகம் செயல்படும் என்று அங்குள்ள இந்திய வம்சாவளியினர் நம்பிக்கை தெரிவித்துள்ளனர்.

பிரதமரின் இந்த பயணத்தின்போது இந்தியா - ஃபிரான்ஸ் இரு நாடுகளின் ஒத்துழைப்புடன் அமைந்துள்ள சர்வதேச மாதிரி வெப்ப அணு சோதனை கூடத்தையும் பார்வையிடுகிறார்.

அதன் பின்னர் உலகப் போர்களின்போது உயிரிழந்த இந்திய வீரர்களின் நினைவிடம் அமைந்துள்ள **Mazargues** போர் நினைவிடத்திற்குச் சென்று மரியாதை செலுத்துகிறார்.

ஃபிரான்ஸ் பயணத்தை முடித்துக்கொண்டு அமெரிக்க அதிபர் திரு. டொனால்ட் ட்ரம்பின் அழைப்பை ஏற்று இரண்டு நாள் பயணமாக பிரதமர் அமெரிக்கா செல்கிறார்.

<<<<>>>>

சர்வதேச யுனானி தினம் இன்று கடைபிடிக்கப்படுகிறது.

இதனையொட்டி புதுதில்லியில் இன்று தொடங்கும் இரண்டு நாள் சர்வதேச யுனானி மாநாட்டை குடியரசுத்தலைவர் திருமதி திரௌபதி முர்மு தொடங்கி வைக்கிறார்.

இந்த மாநாட்டில் மத்திய அறிவியல் மற்றும் தொழில்நுட்பத்துறை இணையமைச்சர் டாக்டர் ஜிதேந்திர சிங்கும் கலந்துகொள்கிறார்.

யுனானி மருத்துவரும், கல்வியாளரும், விடுதலைப் போராட்ட வீரரமான ஹக்கீம் அஜ்மல் கானின் பிறந்த தினத்தை முன்னிட்டு ஒவ்வொரு ஆண்டும் இந்நாள் யுனானி தினமாக கொண்டாடப்படுகிறது.

இந்த மாநாட்டிற்கு ஆயுஷ் அமைச்சகம் ஏற்பாடு செய்துள்ளது.

'யுனானி மருத்துவத்தில் புதுமையான தீர்வு' என்ற கருப்பொருளில் இந்த ஆண்டு மாநாடு நடைபெறுகிறது.

இந்த மாநாட்டில் யுனானி மருத்துவத்தின் முக்கியத்துவத்தை வலியுறுத்தும் பல்வேறு தலைப்புகளில் கலந்துரையாடல்கள், விவாதங்கள் நடைபெறுகின்றன.

<<<<>>>>

இந்திய எரிசக்தி வாரம் இன்று முதல் ஒருவார காலத்திற்கு கொண்டாடப்படுகிறது.

இதனையொட்டி புதுதில்லியில் இன்றுமுதல் நான்கு நாட்கள் எரிசக்தி மாநாடு நடைபெறுகிறது.

இந்த மாநாட்டை காணொலி காட்சி வாயிலாக பிரதமர் திரு. நரேந்திர மோடி தொடங்கி வைக்கிறார்.

இந்நிகழ்ச்சியில் பெட்ரோலியத்துறை அமைச்சர் திரு. ஹர்தீப் சிங் பூரி கலந்துகொள்கிறார்.

இந்த மாநாட்டில் உலக அளவில் தலைசிறந்து விளங்கும் எரிசக்தி நிறுவனங்களின் தலைமைச் செயல் அதிகாரிகள் பலர் கலந்துகொள்கின்றனர்.

கண்காட்சி அரங்குகளும் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

பிரமரின் இலவச எரிவாயு திட்டத்தின் சிறப்பம்சங்கள் குறித்தும் இந்த மாநாட்டில் எடுத்துரைக்கப்படுகிறது.

கனடா, ஜெர்மனி, ஜப்பான், அமெரிக்கா மற்றும் இங்கிலாந்து ஆகிய நாடுகளின் சிறப்பு அரங்குகளும் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

எரிசக்தி துறையில் சர்வதேச அளவில் புகழ்பெற்ற நிபுணர்கள் பலரும் இந்த மாநாட்டில் பங்கேற்கின்றனர்.

<<<<>>>>

வேவ்ஸ் செயற்கை நுண்ணறிவு போட்டிகளில் பங்கேற்பதற்காக இதுவரை 70 ஆயிரம் பேர் விண்ணப்பித்துள்ளனர்.

மத்திய தகவல் ஒலிபரப்பு அமைச்சகத்துடன் இணைந்து இந்திய இணையதளம் மற்றும் மொபைல் சங்கம் இதற்கு ஏற்பாடு செய்துள்ளது. செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பத்தின் வடிவமைப்பாளர்கள் மற்றும் அதன் ஆர்வலர்களை ஒன்றிணைக்கும் வகையில் இந்தப் போட்டிகள் நடைபெறுகின்றன.

முதலீட்டாளர்கள், தொழில்துறை தலைவர்களிடம் நம்பிக்கையை வளர்க்கும் வகையில் இந்த போட்டிகள் நடைபெறுவதாக மத்திய தகவல் ஒலிபரப்புத்துறை அமைச்சகம் தெரிவித்துள்ளது.

<<<<>>>>

மத்திய அரசின் போதைப் பொருளுக்கு எதிரான தொடர் நடவடிக்கைகள் காரணமாக கடந்த ஆண்டில் 25 ஆயிரம் கோடி ரூபாய் மதிப்பிலான போதைப் பொருட்கள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளதாக உள்துறை அமைச்சகம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது, அதற்கு முந்தைய ஆண்டைக் காட்டிலும் 55 சதவீதம் அதிகமாகும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

செயற்கை ரசாயனம் மூலம் உருவாக்கப்பட்ட போதைப் பொருட்கள் மற்றும் கொகைன ஆகியவை கைப்பற்றப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

2023ஆம் ஆண்டு 292 கிலோ கிராம் அளவிற்கு கொகைனும், கடந்த ஆண்டு ஆயிரத்து 426 கிலோ கொகைனும் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன.

**Hashish** வகை போதைப் பொருள் 34 முதல் 64 குவிண்டால் கைப்பற்றப்பட்டுள்ளதாக மத்திய உள்துறை அமைச்சகத்தின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

<<<<>>>>

இனி மகா கும்பமேளா குறித்த செய்திகள்...

பிரயாக்ராஜில் நடைபெற்று வரும் மகா கும்பமேளாவில் பக்தர்களின் உடல்நலத்திற்கு முன்னுரிமை அளிக்கப்பட்டு வருகிறது.

அதற்காக விரிவான மருத்துவ ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

இதுவரை 7 லட்சத்திற்கும் அதிகமான பக்தர்களுக்கு சிகிச்சை அளிக்கப்பட்டுள்ளது.

சுகாதார சேவைகளை உலகத்தரத்துடன் அளிப்பதற்காக கனடா – ஜெர்மனி – ரஷ்ய நாடுகளைச் சேர்ந்த மருத்துவ நிபுணர்கள் மற்றும் தில்லி எய்ம்ஸ் மருத்துவமனை மருத்துவர்கள் பனாரஸ் இந்து பல்கலைக்கழகத்தின் **IMS** மருத்துவர்களும் இணைந்து அங்கு பணியாற்றி வருகின்றனர்.

மத்திய அரசின் ஆயுஷ் அமைச்சகம் மற்றும் உத்தரப்பிரதேச ஆயுஷ் சங்க ஒத்துழைப்புடன் 10 ஆயுர்வேதம் மற்றும் 10 ஹோமியோபதி மருத்துவமனைகள் 24 மணி நேரமும் செயல்பட்டு வருகின்றன.

இதற்கிடையே மகா கும்பமேளா நிகழ்ச்சியை சுற்றுலா அமைச்சகம் பல்வேறு வழிகள் மூலம் ஊக்குவித்து வருகிறது

வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள், சமூக ஊடகங்களில் செல்வாக்கு செலுத்துபவர்கள் ஆகியோர் சிறப்பு அழைப்பாளர்களாக அழைக்கப்பட்டுள்ளனர்.

இதுகுறித்து சமூக ஊடகங்களில் காணொலிகள், சிறப்பு நிகழ்வுகள் பதிவு செய்யப்பட்டு வருகின்றன.

<<<<>>>>

விவசாயிகளின் நலன் கருதி உழவர் சந்தைகளை தமிழக அரசு ஏற்படுத்தி வருவதாக மாநில வனத்துறை அமைச்சர் திரு. பொன்முடி தெரிவித்துள்ளார்.

விழுப்புரத்தை அடுத்துள்ள விக்கிரவாண்டி பேரூராட்சி பேருந்து நிலையம் அருகே ஒரு கோடியே 50 லட்சம் ரூபாய் மதிப்பிலான புதிய உழவர்சந்தை கட்டுவதற்கான அடிக்கல் நாட்டு விழாவில் கலந்துகொண்டு பேசிய அவர், உழவர்சந்தைகளில் விவசாயிகள் தங்கள் பொருட்களை தாங்களே நேரடியாக விற்பனை செய்வதன் மூலம் இடைத்தரகர்கள் இல்லாமல் நேரடியாக லாபம் பெறுவதற்கு இந்த சந்தை உதவி வருவதாக தெரிவித்தார்.

விவசாயிகளின் வரவேற்பை அடுத்து புதிய உழவர் சந்தைகள் கட்டப்பட்டு வருவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

மேலும் விவசாயிகள் விற்பனை செய்வதற்காக, நெல்கொள்முதல் நிலையங்கள் பல்வேறு இடங்களில் திறக்கப்பட்டுள்ளதாகவும் அமைச்சர் திரு. பொன்முடி கூறினார்.

<<<<>>>>

நாகையில் இருந்து இலங்கையின் காங்கேசன்துறைக்கு இயக்கப்படும் கப்பல் சேவை மீண்டும் நாளைமுதல் தொடங்குகிறது.

முன்னேற்பாட்டுப் பணிகளில் கப்பல் போக்குவரத்துத் துறையினர் ஈடுபட்டுள்ளனர்.

<<<<>>>>

தைப்பூச திருவிழா இன்று கொண்டாடப்படுகிறது.

தை மாதம் பூச நட்சத்திரத்துடன் வரும் முதல் பௌர்ணமி நாள் தைப்பூசமாக கொண்டாடப்பட்டு வருகிறது.

இந்த திருநாளையொட்டி முருகன் கோவில்களில் சிறப்பு பூஜைகள் மற்றும் வழிபாடுகள் நடைபெறுகின்றன.

தமிழகத்தில் தூத்துக்குடி மாவட்டம் திருச்செந்தூார் முருகன் கோவிலில் தைப்பூச திருவிழா வெகு விமரிசையாக கொண்டாடப்படுகிறது.

இன்று அதிகாலை ஒரு மணிக்கு கோவில் நடை திறக்கப்பட்டது.

ஆயிரக்கணக்கான பக்தர்கள் சுவாமி தரிசனம் செய்தனர்.

மாநிலத்தில் உள்ள பல்வேறு முருகன் கோவில்களிலும் இன்று சிறப்புப் பூஜைகள் நடைபெற்று வருகின்றன.

சென்னை, மதுரை உள்ளிட்ட நகரங்களில் அமைந்துள்ள கோவில்களில் தெப்பத் திருவிழாக்கள் நடைபெறுகின்றன.

<<<<>>>>

அமெரிக்காவில் நடைபெற்று வரும் சர்வதேச டென்னிஸ் போட்டியின் ஆடவர் இரட்டையர் பிரிவு முதல் சுற்று ஆட்டத்தில் இந்தியாவின் ஸ்ரீராம் பாலாஜி – மெக்சிகோவின் ரேயாஸ் வரேலா இணை இன்று அமெரிக்க இணையை எதிர்கொள்கிறது.

---------------

தில்லி ஓபன் டென்னிஸ் போட்டியின் ஆடவர் ஒற்றையர் பிரிவு முதல் சுற்று ஆட்டத்தில் இந்தியாவின் சசிகுமார் முகுந்த் இன்று ஃபிரான்சின் **Sascha Gueymerd Wayenvurg**-ஐ எதிர்கொள்கிறார்.

மற்றொரு ஆட்டத்தில் ராம்குமார் ராமநாதன், செக் குடியரசின் **Dalibor-**ஐ எதிர்கொள்கிறார்.

---------------

ஐ.எஸ்.எல். கால்பந்து போட்டியில் பஞ்சாப் - ஒடிசா அணிகளுக்கு இடையேயான ஆட்டம் டிராவில் முடிவடைந்தது.

புவனேஸ்வரில் நேற்று நடைபெற்ற இப்போட்டி 1-1 என்ற கோல் கணக்கில் டிரா ஆனது.

**<<<<The end>>>>**